தேவனின் அன்பு ஊழியங்கள்

மங்கள வார்த்தை

GOD'S LOVE MINISTRIES - VOL- II - (ISSUE - 5) - மாத இதழ் - மே - 2021

பிழைப்பிற்கு வழிகள்!

மனம் திறந்து சில வார்த்தைகள்... 03
(சகோ. T. ஸ்டீபன், நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்)

இம்மாத மங்கள வார்த்தை: பிழைப்பிற்கான வழிகள்! 04
(சகோ. T. ஸ்டீபன், நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்)

ஆண்டவரின் புண்ணியங்களை அறிவிக்கும் தொலைக்காட்சி ஊழியங்கள்! 09
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

பெண்கள் பகுதி: ஆண்டவரை பிரியப்படுத்துவது எப்படி? 12
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

வேத வினா போட்டி 15
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

ஆண்டவரின் அற்புதங்கள் 16

மார்வெல் திருமண தகவல் மையம் 18

சிறுவர்கள் பகுதி/குட்டீஸ் ஸ்பெஷல்: உண்மைக்குக் கிடைத்த பரிசு! 19
(சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

வாலிபர் பகுதி: கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவீர்கள்! 21
(சகோதரி பவ்யா டெரில், தேவனின் அன்பு ஊழியங்கள்)

தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள் 24

எங்கள் சேவைகள் 26

மனம் திறந்து சில வார்த்தைகள்...

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

ஆண்டவரும், உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்கள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்!

கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை கண்ணின் மணிபோல பொதிந்து காத்தார். நம்மை சுற்றிலும் எவ்வளவோ அழிவுகள், வியாதிகள், துன்பங்கள் நடந்தாலும் அவைகளின் மத்தியிலும் ஆண்டவர் நம்மையும், நம் குடும்பத்தினரையும் அற்புதமாய் பாதுகாத்தாரே, நம்மை நடத்தினாரே, அதை நினைத்து அவருக்கு நன்றிசொல்லுவோம் (சங்கீதம் 103:1,2).

பிறந்திருக்கிற புதிய மே மாதத்தை தேவனுடைய துணையோடு வரவேற்போம். இந்த புதிய மாதத்தில் ஆண்டவரின் கரத்தைப் பிடித்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்போம். கொரோனாவின் 2-வது அலையின் தாக்கத்தைக் குறித்து ஒருவேளை நீங்கள் கவலையோடு இருக்கலாம்! தேவ கரம் உங்களோடும், உங்கள் குடும்பத்தோடும் எப்பொழுதும் இருக்கிறபடியால், இனி தீங்கைக் காண்பதில்லை!

"இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்" (செப்பனியா 3:15).

ஆண்டவர் தாமே, இந்த பொது முடக்க காலத்தில் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அற்புதமாய் பாதுகாத்து, ஆசீர்வதித்து வழிநடத்துமாறு கண்ணீரோடு ஜெபித்துள்ளேன். ஆமென்.

கர்த்தர் மகிமையான காரியங்களைச் செய்வாராக!

கிறிஸ்துவின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(T. STEPHEN)

நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்

பிழைப்பிற்கு வழிகள்!

மே மாத மங்கள வார்த்தை:

(சகோ. T.ஸ்டீபன், நிறுவனர்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர-சகோதரிகளே,

நம்மை சிருஷ்டித்தவரும், நம்மை உண்டாக்கினவரும், நம்மை ஒருபோதும் மறந்து போகாதவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

ஆண்டவருடைய பாதபடியிலே அமர்ந்து, ஆண்டவரே என் பிள்ளைகளுக்கு இந்த மே மாதத்தில் என்ன மங்கள வார்த்தை கொடுக்க விரும்புகிறீர்? இந்த கொரோனாவின் 2-வது தாக்கத்தில் இருக்கும் அவர்களுக்கு என்ன வார்த்தை சொல்லி ஆறுதல்படுத்த விரும்புகிறீர்? என்று கண்ணீரோடு தேவ சமூகத்திலே காத்திருந்தபொழுது, கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்படி கொடுத்த மங்கள வார்த்தை "பிழைப்பிற்கான வழிகள்". இந்த தேவ செய்தியை தியானித்தபோது ஆண்டவர் கொடுத்த மூல வசனம்:

"நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்து சுகித்து நீடித்திருக்கும்படி, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக்கடவீர்கள்" (உபாகமம் 5:33)

ஆம், நீங்கள் சுதந்தரித்திருக்கிற தேசத்திலே, பட்டணத்திலே, கிராமத்திலே பிழைத்து, சுகித்து, நீடித்திருப்பீர்கள்! ஒரு வேளை நீங்கள், கொரோனாவின் 2-வது அலையில் நானும், என் குடும்பமும் கஷ்டப்படுகிறோமே, பிழைப்பில்லையே, வருமானம் இல்லையே, வாழ வழியில்லையே, எவ்வளவோ நான் கஷ்டப்பட்டு, சம்பாதித்தாலும், வாங்கும் சம்பளமெல்லாம் வட்டிக்குப் போய்விடுகிறதே, ஒன்றும் என் கையில் தங்கவில்லையே, என் பிள்ளைக்கு இன்னும் ஒரு வழி பிறக்கவில்லையே, என்றெல்லாம் அநேகர் கண்ணீரோடும், வேதனையோடும் சொல்லக்கூடும். ஆண்டவர் இவைகள் எல்லாவற்றிலுமிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும் அற்புதமாய் பாதுகாத்து, நடத்த வல்லமையுள்ளவராய் இருக்கிறார்!

ஆதாமை ஆண்டவர் உருவாக்கினபொழுது, அவன் தனிமையாய், சும்மா இருப்பதை பார்க்க விரும்பவில்லை. அவனது பிழைப்பிற்காக ஆண்டவர், ஏதேன் தோட்டத்தை படைத்து, அதை பண்படுத்தவும், பாதுகாக்கவும், அந்தத் தோட்டத்தில் அவன் வேலைசெய்து பிழைப்பதற்கான, வழிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தார் (ஆதியாகமம் 2:15)

மேற்கண்ட வேத வசனத்தை தியானித்தபோது, ஆண்டவர் 3 காரியங்களை வெளிப்படுத்தினார். அதை நாம் சுருக்கமாக தியானித்து, ஜெபத்திற்குள்ளாக கடந்துசெல்வோம்:

1) கர்த்தரைத் தேடுங்கள் 'பிழைப்பீர்கள்':

முதலாவதாக, நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் கர்த்தரைத் தேடுங்கள். அப்பொழுது நீங்கள் பிழைப்பீர்கள். வேதம் சொல்லுகிறது:

"...என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோஸ் 5:4)

கர்த்தர் நமக்கும், நம்முடைய சந்ததிக்கும் சொல்லுகிறது என்னவென்றால், என்னை தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள். ஒரு மனுஷன் இந்த உலகத்தில் பிழைத்து,

சுகித்து, நீடித்து வாழ்வதற்கு, மிகவும் முக்கியமானது என்னவென்றால், எப்பொழுதும் நாம் ஒவ்வொருவரும் பரலோகத்தின் தேவனை தேடி, அவரை இறுகப் பிடித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது அவர் பிழைப்பிற்கான வழிகளை திறப்பார். சங்கீதக்காரன் சொல்லுகிறான்:

"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" (சங்கீதம் 121:1,2)

தாவீதின் கண்கள் எப்பொழுதும் ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராகவே இருந்தது. இந்த அனுபவத்தை நீங்களும் உங்களுடையதாக்கிக்கொள்ளுங்கள்! உலகத்தில் வாழ்கிற ஒவ்வொருவருக்கும் பிழைப்பிற்கு வழி, பரலோகத்திலிருந்து தான் வருகிறது (யாக்கோபு 1:17), பரலோகத்தின் தேவனை அண்டிப் பிடித்து, அவரைக் கிட்டிச் சேர்ந்தால் பிழைப்பிற்கான வழியை அவர் ஏற்படுத்திக் கொடுப்பார். அவர் பரலோகத்திலிருந்து பொக்கிஷசாலையை நமக்காக திறக்கிறவர். வேதம் சொல்லுகிறது:

"தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்; இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர்" (சங்கீதம் 65:9)

ஆம், நமது அருமை ஆண்டவர் நம்மை விசாரிக்கிறவர். நமது பிள்ளைகளை விசாரிக்கிறவர்! நமக்கும், நம்முடைய குடும்பத்திற்கும் நீர்ப்பாய்ச்சுகிறவர்! மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டது போல ஆண்டவரை விட்டு விலகாத ஒரு நல்ல பங்கை நீங்கள் தெரிந்துகொள்வீர்களேயானால், உங்களது தேவை இன்னதென்று அவர் அறிவார். அவர் நம்முடைய மன விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றுவார் (சங்கீதம் 20:4) சிம்சோனைக் குறித்து வேதம் இவ்வாறு கூறுகிறது:

"அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையில் விழவேண்டுமோ என்றான். அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார் அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது: அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது; அவன் பிழைத்தான்..." (நியாதிபதிகள் 15:18,19).

இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாய் பெலிஸ்தர்கள் வந்தபோது ஆயிரம் பேரை சிம்சோன் கொன்று, வெற்றியோடு திரும்பி வரும்போது, தாகத்தினால், நாவறண்டு, உதவி செய்ய யாரும் இல்லாத வனாந்திரத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, அடியான் மூலம் இவ்வளவு பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டீரே, இப்பொழுது நான் தாகத்தினால் சாகிறேனே" என ஆண்டவரை கூப்பிட்டான். மறுஉத்தரவு கொடுக்கிற ஆண்டவர் என்ன செய்தார்? லேகியிலுள்ள பள்ளத்தாக்கை பிளக்கப்பண்ணினார். அதிலிருந்து தண்ணீர் வந்தது. அதை அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது. அவன் பிழைத்தான். ஆம், அதுபோல எனக்கு உதவிசெய்வார் யாருமின்றி, என்னுடைய வாழ்க்கை வனாந்திரமாய் இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம்! சிம்சோனைப்போல நீங்களும் ஆண்டவரை தேடுங்கள். அவர் உங்களை வாழ வைப்பார்!

சவுதி அரேபியா அரசு மருத்துவமனையில் எங்களது தொலைக்காட்சி ஊழியங்களை நேசிக்கும் செவிலியர்கள், டெக்னீசியன்ஸ் அநேகர் வேலை செய்கிறார்கள். திருநெல்வேலியிலிருந்து சகோதரர் ரவீந்தர் அவர்கள் அங்கு இருக்கிறார் அவர் ஒரு நாள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஒரு காரியத்தை என்னிடம் சொன்னார். "என்னுடைய அக்கா மகள் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தை சார்ந்தவள். அவள் செவிலியர் படிப்பை முடித்துள்ளபடியால், எப்படியாவது அவளை சவுதிக்கு அழைத்து வந்து, அரசாங்க மருத்துவ மனையில் வேலையில் சேர்த்துவிட்டால், அவள் குடும்பம் முன்னுக்கு வந்துவிடும் என்ற எண்ணத்தில் அந்தப் பிள்ளையை இந்தியாவிலிருந்து, சவுதி அழைத்து வந்தேன். ஆனால் அவளோ சவுதி அரசு வேலைக்காக நடத்திய நுழைவுத் தேர்வில் 3 முறையும் தோல்வியடைந்தாள். ஆகவே, அவள் உடனே இந்தியா திரும்பும் நிலையில், எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கிறாள். அவளோடு பேசுங்கள் என தொலைபேசி இணைப்பை என்னிடம் கொடுத்தார். உடனே நான், "ஆண்டவரை நீ நம்பினால், இன்றைக்கு உனக்கு ஓர் அற்புதம் நடக்கும். நீ சரியென்று சொன்னால் நான் இப்பொழுது ஜெபிக்கிறேன்" என்றேன். அவள் சொன்னாள், "நான் கண்டிப்பாக விசுவாசிக்கிறேன்" என்றாள். உடனே ஆண்டவரிடத்தில் நான் ஒரே ஒரு வார்த்தை தான் சொன்னேன். "ஆண்டவரே, உங்களைத் தேடி வருகிற பிள்ளைகளுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்று சொல்லியிருக்கின்றீர். என் பிள்ளைக்கு நீர் வேலைக்காக தேர்வு எழுத மறுபடியும் ஒரு வாய்ப்பு தாரும்" என்று ஜெபித்து, ஆண்டவர் உனக்கு கண்டிப்பாக உதவிசெய்வார் என்று தொலைபேசியை வைத்துவிட்டேன். அடுத்த நாள் காலை 11:30 மணிக்கு என்னோடு தொலைபேசி மூலம் மறுபடியும் பேசினார். அவர் சொன்ன காரியம். இதுவரைக்கும் சவுதி வரலாற்றில் இல்லாத ஒரு காரியம் நடந்தது. சகோதரர் ரவீந்தரை அழைத்து, உங்கள் அக்கா மகளுக்கு இன்னும் தேர்வு எழுத ஒரு சான்ஸ் நாங்கள் கொடுக்கிறோம். அவளை அழைத்து வாருங்கள் என்றனர். அவள் உடனே 4-வது முறையாக வேலைக்காக தேர்வு எழுதி, வெற்றிபெற்று வேலையில் சேர்ந்தாள். அல்லேலூயா.

2) மனம் திரும்புங்கள் "பிழைப்பீர்கள்":

இரண்டாவதாக, நீங்களும், உங்கள் பிள்ளைகளும், உங்கள் குடும்பத்தினரும் மனம் திரும்பும்போது, உங்கள் பாவங்களை, அக்கிரமங்களை மீறுதல்களை அறிக்கையிட்டு, ஆண்டவருடைய இரக்கத்தைப் பெறும்பொழுது நீங்களும், உங்கள் பிள்ளைகளும், குடும்பத்தினரும் பிழைப்பீர்கள்! வேதம் சொல்லுகிறது:

"மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசேக்கியேல் 18:32)

எந்தவொரு மனிதனும் மனம் திரும்பாமல் சாகிறதை நான் விரும்பவில்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆம், எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும், எல்லாரும் ஆண்டவரை அறிந்துகொள்ள வேண்டும், எல்லாரும் மனம் திரும்பி பரலோக இராஜ்ஜியத்திற்கு சொந்தக்காரர்களாய் மாறவேண்டும். வேதம் சொல்லுகிறது:

"துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்..." (எசேக்கியேல் 18:23)



ஊதாரி மைந்தனின் வாழ்க்கையைக் குறித்து நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். தன் தகப்பனிடம் சொத்தை பிரித்து வாங்கி, தூர தேசத்திற்குச் சென்று, எல்லாவற்றையும் அழித்தான். எல்லாம் செலவழிந்த பிறகு பன்றிகள் உண்ணும் தவிட்டினால் தன் பசியை ஆற்ற முயற்சித்தான். அதுவும் அவனுக்குக் கிடைக்காமல் போயிற்று. அப்பொழுது தான் அவனுக்கு புத்தி தெளிந்தது. தன் தகப்பன் வீட்டில் எத்தனையோபேருக்கு பூர்த்தியான சாப்பாடு கிடைக்கிறது. நானோ இங்கு பசியால் சாகிறேன். "தகப்பனே, உமக்கு விரோதமாகவும் பரத்திற்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். இனி உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் தகுதி இழந்தவன். என்னை உம்முடைய வேலைக்காரனில் ஒருவனாக சேர்த்துக்கொள்ளும்" என்பேன் என உணர்வடைந்தான். அவன் மனம் திரும்பி, தன் தகப்பனைப் பார்க்கும்படி வந்தபோது, தகப்பன் அவனைக் கட்டிப் பிடித்து, முத்தம் கொடுத்தான். ஊதாரி மைந்தனுக்கு பிழைப்பிற்கு வழி, ஆகாரத்திற்கு வழி கிடைத்தது. அவனுக்கு விலை உயர்ந்த மோதிரத்தை, காலணிகளை அணிவித்தார்கள். கொழுத்த கன்றை அடித்து, அவர்கள் விழா கொண்டாடினார்கள் (லூக்கா 15:11-32). அல்லேலூயா.

ஒரு தகப்பனார், மிகவும் கஷ்டப்பட்டு, வேறு வழியின்றி, பனை மரம் ஏறி, தன்னுடைய பிள்ளைகளையெல்லாம் நன்றாக படிக்க வைத்தார். அவர்கள் மகன் நல்லதொரு வேலையில் சேர்ந்தான். ஒரு முறை அவன், விடுமுறைக்கு அவன் ஊருக்கு வந்தபோது, தன் காலால் பெற்ற தாய் என்றும் பாராமல், அவர்களை உதைத்து தள்ளினான். அவர்கள் தலையில் அடிபட்டு, மயக்க நிலையில், மருத்துவமனையில் அனுமதித்தார்கள். நானும் அந்தத் தாயாருக்காக ஜெபிக்கும்படி அழைக்கப்பட்டிருந்தேன். அப்பொழுது அந்தத் தாயார் என்ன சொன்னார்கள் தெரியுமா? "இதனிமித்தம் என் பிள்ளைக்கு ஒன்றும் ஆகிவிடக் கூடாது. என்னை அவன் எட்டி உதைத்தது பரவாயில்லை. நான் வாழ்ந்து முடிந்தவள். ஆனால் என் பிள்ளை வாழப்போகிறவன். ஆண்டவருடைய கோபாக்கினை என் பிள்ளையின் மீது வந்துவிடக் கூடாது. என் பிள்ளைக்காக ஜெபியுங்கள்" என்றார்கள்.

வாலிப வயதிலிருக்கும், ஆண்டவருடைய பிள்ளைகள், தங்கள் பெற்றோரை ஒருபோதும் துன்பப்படுத்தவே கூடாது! மனம் திரும்புங்கள். ஆண்டவர் உங்களை மன்னிப்பார் (நீதிமொழிகள் 28:13) உங்கள் மேல் ஆசீர்வாதங்களைப் பொழியப்பண்ணுவார்! நீங்கள் வாழ்ந்து, சுகித்திருப்பீர்கள். அல்லேலூயா.

3) விசுவாசியுங்கள் "பிழைப்பீர்கள்";

மூன்றாவதாக, ஆண்டவரையும், ஆண்டவருடைய வல்லமைகளையும், அற்புதங்களையும் விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் பிழைப்பீர்கள்! வேதம் சொல்லுகிறது:

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (எபிரெயர் 10:38)

ஆண்டவருடைய பிள்ளைகளை, 'விசுவாசிகள்' என்று அழைப்பார்கள். ஆண்டவர் சொல்லுகிறார், "நீ விசுவாசித்தால் பிழைப்பாய், தேவனுடைய மகிமையை காண்பாய்". ஆகவே, உங்களுக்கு ஒரு நம்பிக்கை, விசுவாசம் ஆண்டவர் மீது இருக்க வேண்டும், "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்" என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும் (மத்தேயு 8:17)

நோவாவையும், அவன் குடும்பத்தையும் பெரிய ஜலப்பிரளயத்திலிருந்து ஆண்டவர் காப்பாற்றினார். காரணம் நோவா ஆண்டவர் மீது விசுவாசம் வைத்திருந்தான். அந்த விசுவாசம் என்ன வென்றால் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு" என்பதே (பிலிப்பியர் 4:13) வயது சென்ற நோவா, ஆண்டவரிடமிருந்து எச்சரிப்பைப் பெற்று, பெரிய பேழையை கட்டி முடித்தான். ஆண்டவரின் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆகவே தான் நோவாவும், அவரது குடும்பத்தினரும் அழிவிலிருந்து காப்பற்றப்பட்டார்கள்!



சில வருடங்களுக்கு முன்பாக, குடல் கேன்சரினால் பாதிக்கப்பட்ட ஒரு முதியவரை எங்கள் ஜெப கோபுரத்திற்கு அவரது பிள்ளைகள் இரண்டுபேர் சேர்ந்து தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவர் மருத்துவரால் கைவிடப்பட்ட நிலையில், 1 மணி நேரத்திற்குள் மரித்துவிடுவார் என்ற நிலையில், அவரை தூக்கிக் கொண்டு என் முன்னால் அமர வைத்தார்கள். உங்களுக்கு என்ன காரியத்திற்காக நான் ஜெபிக்க வேண்டும்? என்றேன், அவர் சொன்னார், "உங்களாலே அநேகம் பேருடைய கண்ணீர் துடைக்கப்படுகிறது. ஆண்டவர் உங்களுக்கு தீர்க்க ஆயுசைக் கொடுக்க வேண்டும். நீங்கள் அநேக காலங்கள் நன்றாக இருக்க வேண்டும், அதுதான் என்னுடைய ஆசை" என்றார். அந்த நேரத்தில் என்னிடம் கொஞ்சம் சாக்லேட்கள் இருந்தது. அதில் ஒன்றை எடுத்து, 3 மாதங்களாக தண்ணீர் உணவு மட்டும் அருந்தி வாழ்ந்த அவருக்கு, இயேசுவின் இரத்தத்தில் துவைத்து, அவருக்காக ஜெபித்து "நீங்கள் சாகாமல் பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பீர்கள்" என்று மங்கள வாக்கு சொல்லி அதை சாப்பிடக் கொடுத்தேன். அதை அப்படியே சாப்பிட்டுக்கொண்டே இருந்தார். அவர் அதை சாப்பிட்டு முடிப்பதற்குள், ஆண்டவருடைய குணமாக்கும் வல்லமை அவருக்குள் இறங்குவதை நான் என் ஆவியிலே உணர்ந்தேன். அவர்கள் பிள்ளைகள் இருவரும் அவரை மறுபடியும் தூக்கிச்செல்லும்படி வந்தார்கள். அவரோ நானே எழும்புகிறேன் என்றார். அப்படியே லிப்ட்டைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கினார். அருகிலிருந்த உணவு விடுதிக்குச் சென்று இட்லி வாங்கி வரும்படி தன் பிள்ளைகளிடம் சொன்னார். நன்றாக சாப்பிட்டார். வருடங்கள் 8 உருண்டோடி விட்டது. இன்றைக்கும் அவர் ஜீவனோடிருக்கிறார், ஆம் ஆண்டவரை விசுவாசிக்கும்போது, இதே அற்புதம் உங்கள் வாழ்விலும் நடக்கும். அல்லேலூயா!

ஆம் ஆண்டவர் தம்முடைய பிள்ளைகள் எப்பொழுதும் வாழ்ந்து சுகித்திருக்கும்படி விரும்புவதோடு, அவர்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே, வாழ வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறவராய் இருக்கிறார்! ஆகவே, மேற்கண்ட காரியங்களை உங்கள் வாழ்வில் நீங்கள் அப்பியாசப்படுத்தும்போது, உங்கள் வாழ்வும் ஆசீர்வதிக்கப்படும்! நீங்கள் கர்த்தரைத் தேடும்போது, நீங்கள் மனம் திரும்பி, உங்கள் பாவங்களை அறிக்கையிடும்போது, அவர் உங்கள் பாவங்களை, சாபங்களையெல்லாம் மன்னித்து. நீங்கள் பிழைத்திருக்க வழி செய்வார். நீங்கள் ஆண்டவரையும், அவருடைய வல்லமைகளையும் விசுவாசிக்கும்போது அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது, உங்கள் தேசத்திலே, நீங்கள் இருக்கிற இடங்களிலே நீங்கள் பிழைத்து, சுகித்து நீடித்திருக்கும்படிச் செய்கிறார்! இந்த தேவனை நாம் இறுகப் பிடித்துக்கொள்ளுவோம்!

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

பிறந்த நாள் மற்றும் திருமண நாள்

வாழ்த்துக்கள்

மே மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உங்கள் அனைவருக்கும் தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் அன்பின் வாழ்த்துக்களை! தெரிவித்துக்கொள்கிறோம்!

"கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்;
(சங்கீதம் 128:5)

ஆண்டவரின் புண்ணியங்களை அறிவிக்கும் தொலைக்காட்சி ஊழியங்கள்!

(சகோதரி **ஜோஸ்பின் ஸ்டீபன்,**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர சகோதரிகளே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

இந்த மாதம் தேவனின் அன்பு ஊழியங்களின் தொலைக்காட்சி ஊழியங்களைக் குறித்து எழுதுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். தேவனின் அன்பு ஊழியங்களின் "அன்பரின் சத்தம்" மற்றும் "அன்பரின் குரல்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் உலகெங்கிலும் மகிமையான காரியங்களை ஆண்டவர் செய்து வருகிறார். குறிப்பாக, சத்தியம் டி.வியில் "அன்பரின் குரல்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரவு 11:30 முதல் 12:00 மணி வரை ஏப்ரல் 10,2021 முதல், மறுபடியும் ஒளிபரப்ப ஆண்டவர் கிருபை செய்துள்ளார். அதற்காக ஆண்டவருக்கு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன் (சங்கீதம் 103:1,2)

சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம்:

தேவனுடைய அன்பு ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்ட பிரதான நோக்கமே, உலகெங்கிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும் என்பதுதான். இந்த உலகத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருந்த நாட்களில், தம்முடைய சீஷர்களைப் பார்த்து இவ்வாறு சொன்னார்:

> "...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15)

அதோடு நின்றுவிடாமல் தம்முடைய சீஷர்கள் ஒவ்வொருவருக்கும் அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் குணமாக்கும் வரங்களையும், வல்லமைகளையும் கொடுத்தார்! (மத்தேயு 10:1) சீஷர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ, ஆண்டவர் அவர்களோடிருந்து, மகிமையான காரியங்களை நடப்பித்தார்! (மாற்கு 16:20) அல்லேலூயா! மேலும் இது குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நிருபங்களில் எழுதும்போது:

> "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு..." (2 தீமோத்தேயு 4:2)

அன்பு சகோதரர் ஸ்டீபன் அவர்கள் சமயம் கிடைக்கும்பொழுதெல்லாம் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்வதிலும், ஜெபத்துடன் தொலைக்காட்சி நிகழ்சிகளை தயாரித்து, உலகம் முழுவதும் ஒளிபரப்பி, ஆத்துமாக்களை அறுவடை செய்வதிலும் தன்னுடைய முழு நேரத்தையும் செலவிடுகிறார். தொடர்ந்து சகோதரருக்காகவும், அவருடைய ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்!

ஆண்டு முழுவதும் சுவிசேஷம்:

மாதந்தோறும் 450 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, 25 சேனல்களில், 5 மொழிகளில், தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி "அன்பரின் சத்தம்" மற்றும் "அன்பரின் குரல்" என்ற பெயரில் உலகெங்கிலும் ஒளிபரப்பி வருகிறோம். எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் ஆண்டவரால் தொடப்பட்டவர்கள் ஏராளம். நாள்தோறும் எண்ணுக்கடங்காத சாட்சிகள் வந்துகொண்டே இருக்கின்றன. தொலைக்காட்சி ஊழிய நிகழ்ச்சிகளைக் குறித்த கூடுதல் விபரங்களை அறிந்துகொள்ள, *https://www.godsloveministries.co.in-/about-us/tv-schedule/*என்ற இணையதள *link*-ல் பார்த்தோ அல்லது இப்பத்திரிகையின் கடைசி பகுதியில் பார்த்தோ தெரிந்துகொள்ளுங்கள்!

ஆண்டு முழுவதும் சுவிசேஷம்:

கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களிலெல்லாம், "அன்பரின் குரல்" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி, அதன் மூலம் நாங்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்து வருகிறோம். ஆம், எங்களது தொலைக்காட்சி ஊழியங்களில் நீங்கள் இணைந்து, அநேகரை இரட்சிப்பிற்குள், நீதிமார்க்கத்திற்குள் வழிநடத்துங்கள்! தேவனுடைய புண்ணியங்களை அறிவிக்கும் இந்த நல்ல காரியங்களை நீங்கள் செய்யும்போது, அவருடைய ஆசீர்வாதங்களை நிச்சயம் நீங்கள் குடும்பமாக பெற்றுக்கொள்ளுவீர்கள்!

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை, உங்கள் சார்பாகவோ அல்லது உங்கள் மனைவி, பிள்ளைகளுடைய, உங்கள் உடன்பிறந்தோருடைய பிறந்த நாள், திருமண நாள் சார்பாகவோ அல்லது உங்கள் தொழில் நிறுவனத்தின் அல்லது உங்கள் வியாபாரத்தின் வளர்ச்சிக்காகவோ ஒளிபரப்பு செய்யலாம். ஆண்டவர் நிச்சயம் இதை நினைத்தருளி, உங்களையும், உங்கள் உறவினர்களையும், உங்கள் வியாபாரத்தையும், தொழில் நிறுவனத்தையும் பன்மடங்கு ஆசீர்வதிப்பார்! (மத்தேயு 10:40-42).

கடந்த பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் "அன்பரின் குரல்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி, உலகெங்கிலும் இலட்சக்கணக்கானோருக்கு ஆசீர்வாதமாய் இருந்தவர்களின் விபரங்களை கீழே தந்துள்ளேன்.

"...உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே..." (எபிரெயர் 6:10)

என்ற வேத வசனத்தின்படி, ஆண்டவர் தாமே அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும், நிறுவனங்களையும் பன்மடங்காய் ஆசீர்வதித்து உயர்த்துவாராக! (எண்ணாகமம் 6:24-26).

சுவிசேஷ ஊழியத்தில் இணையுங்கள்:

வேதாகம நாட்களில், இயேசு கிறிஸ்து ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நற்செய்தியை அறிவிக்கச் சென்றபோது, அவரோடுகூட இருந்த ஏழை பெண்கள், அவர்களால் முடிந்த காணிக்கைகளை கொடுத்து, ஊழியத்தை தாங்கி வந்ததாக வாசிக்கிறோம் (லூக்கா 8:1-3) அதுபோலவே நீங்கள் நமது "தேவனின் அன்பு" ஊழியங்களின் நற்செய்தியை அறிவிக்கும் "அன்பரின் குரல்" தொலைக்காட்சி ஊழியங்களில் இணைந்து, ஆத்துமாக்களை அறுவடைசெய்யும்போது, அதன் மூலமாக இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை ஆண்டவர் நிச்சயம் உங்கள் பெயரில் எழுதுவார்! (பிலிப்பியர் 4:17) உங்களுக்கு, பாக்கியமும், நன்மையும் உண்டாகும்! மேலும் கூடுதல் விபரங்களுக்கு:



தேவனின் அன்பு ஊழியங்கள்,
எண்14. ராமலிங்க நகர், OMR ரோடு, SRP ஸ்கூல்ஸ் அருகில்,
கொட்டிவாக்கம், சென்னை – 600041
தொலைபேசி +91 44 2454 7999 || 99419 50999
Email: publications@godsloveministries.co.in
Website:www.godsloveministries.co.in

ஆண்டவரை பிரியப்படுத்துவது எப்படி?

(சகோதரி **ஜோஸ்பின் ஸ்டீபன்,**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர-சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் யாவரையும் அன்போடு வாழ்த்துகிறேன்.

கோடை வெயில் கொளுத்துகிற இந்த மே மாதத்தில் உங்களை சந்திப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. மறுபடியும் கொரோனா தடைகள் வந்து நம்முடைய இயல்பு வாழ்க்கையை கலைத்துக் கொண்டிருந்தாலும், நாம் ஆண்டவருக்குப் பிரியமானதை செய்யும் போது அவர் நம்மை ஒரு போதும் கைவிடமாட்டார் (சங்கீதம் 34:10). வேதத்தில் ஒரு அருமையான வசனம் இவ்வாறு கூறுகிறது:

"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" (சங்கீதம் 40:8).

சில குடும்பங்களிலே பார்த்தோமென்றால், கணவன் மனைவியைப் பிரியப்படுத்தவும், மனைவி கணவனைப் பிரியப்படுத்தவும் தம் திராணிக்கும் மிஞ்சி, அநேக காரியங்களைச் செய்கின்றனர். கணவன் மனைவிக்குள் இப்படிப்பட்ட ஒரு பிரியப்படுத்துகிற வாழ்க்கை இருப்பது மிகவும் நல்லது! ஆனாலும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, முதலாவது நாம் ஆண்டவரைப் பிரியப்படுத்தி வாழ வேண்டும். அப்பொழுது ஆண்டவர் நம்மை அவருக்குப் பிரியமான பிள்ளைகளாக மாற்றுவார்!

ஆம், தாவீது ராஜா, கர்த்தரிடத்தில் கேட்கிற முதல் காரியம், "ஆண்டவரே, நான் உம்மை பிரியப்படுத்த விரும்புகிறேன்" ஆண்டவர் மேல் தாவீது ராஜாவிற்கு இருந்த அன்பு தான் அவரை இவ்வாறு சொல்ல வைத்திருக்கிறது. ஆம், நாம் ஆண்டவரை பிரியப்படுத்துவது எப்படி? அவருக்குப் பிரியமாய் வாழ்வது எப்படி? என்பதை இந்த மாதம் நாம் சுருக்கமாய் தியானித்து, ஜெபத்திற்குள் கடந்து செல்வோம்:

1) விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும்:

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபிரெயர் 11:6)

விசுவாசம் என்றால் என்ன? நூற்றுக்கு நூறு கர்த்தரையே நம்பி, அவரை உறுதியாய் பற்றிக்கொள்வது. ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன் என்று அழைக்கப்பட்டார்! ஆண்டவர், "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என்று சொன்னபோது எங்கே போகிறோம் என்று தெரியாமல், கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்ற விசுவாசத்தோடு அவன் கடந்து சென்றான் (ஆதியாகமம் 12:1-4)

எனவே தான் ஆண்டவர் அவருக்குப் பாலும், தேனும் ஒடுகிற கானான் தேசத்தை வாக்களித்தார். ஆம், லாசரு மரித்து நான்கு நாட்கள் கடந்த பின்பும் ஆண்டவர் அவனை உயிரோடு எழுப்பி, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார். அது எவ்வளவு பெரிய விசுவாசம்! (யோவான் 11:43,44). தாவீது, கோலியாத்தை சந்திக்கப் புறப்படும்போது, ஆயுதத்தை நம்பி, போகவில்லை. ஆண்டவரை நம்பி, புறப்பட்டான். ஆண்டவர் அவனுக்கு வெற்றியை கட்டளையிட்டார்! (1 சாமுவேல் 17:47-51). அல்லேலூயா.

இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற எனக்கு அருமையானவர்களே, உங்கள் வாழ்க்கையில் செத்துப்போன ஆசீர்வாதங்கள், செத்துப்போன உடல் உறுப்புக்கள் உயிரடைய வேண்டுமா? பொருளாதாரத்தில், வியாபாரத்தில், தொழிலில் தோல்வியடைந்துள்ள உங்கள் வாழ்க்கையில் வெற்றி உண்டாக வேண்டுமா? இங்கே நான் உங்களுக்கு ஒரு நற்செய்தியை அறிவிக்கட்டும்! ஆம், நீங்கள் ஆண்டவரை பிரியப்படுத்தி, விசுவாசத்தோடு வாழ கற்றுக்கொள்ளுங்கள்! அப்பொழுது உங்கள் வாழ்க்கை செழிப்பாக மாறும்! நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்! மனம் கலங்காதிருங்கள்!

2) கீழ்ப்படிந்து வாழ வேண்டும்:

"இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக் கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்... பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்" (1 சாமுவேல் 15:19 & 22)



சவுல் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பிரியப்படுத்தி வாழ்ந்திருந்தால், அவருடைய சிங்காசனம் நிலைத்திருக்கும். ஆனால் சவுல் கீழ்ப்படியாததினாலே, தன் ராஜிய பாரத்தை இழந்துபோனார். ஆகவே, கர்த்தர் நமக்குக் கொடுத்த கட்டளைகளுக்கு, நாம் எப்பொழுதும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். எப்படி பிள்ளைகள், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதுபோல பெரியவர்களாகிய நாம் அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அப்பொழுது அவர் மனம் மகிழ்ந்து, நமக்குப் பிரியமானதைச் செய்வார்! யோனா தீர்க்கதரிசி கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல், அவருடைய சமூகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு கப்பல் ஏறிச் சென்றதால், எத்தனை பாடுகள் அவன் வாழ்க்கையில்! (யோனா 1:1-3)

இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற பிரியமான தேவ ஜனமே, உங்கள் வாழ்க்கையில் பாடுகள், வேதனைகள், துக்கங்கள் உங்களுக்கு வரும்போது, நீங்கள் எந்த காரியத்தில் ஆண்டவருக்குக் கீழ்ப்படிய தவறினோம் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்த்து, அதை சரிசெய்துகொள்ளும்போது, நீங்கள் ஆண்டவருடைய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுவீர்கள்! கர்த்தரையே இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள்!

3) உண்மையாய் வாழ வேண்டும்:

"பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்" (நீதிமொழிகள் 12:22)

நாம் உண்மையாய் இருக்கும்போது கர்த்தருடைய உள்ளம் மகிழுகிறது. நாம் உண்மையாய் நடக்கும்போது ஆண்டவர் தம்முடைய சம்பூரணமான ஆசீர்வாதங்களை நம்மேல் பொழியப்பண்ணுகிறார்! ஆண்டவருடைய கட்டளைகளின்படி நடந்து, அவருடைய நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாய் இருந்தால், அவர் நம்மை, தம்முடைய சொந்த ஜனமாய் ஏற்றுக்கொண்டு, நம்மைக் குறித்து நீதிமான் என்று சாட்சி கொடுப்பார் (எசேக்கியேல் 18:9) அது மாத்திரமல்ல அநேகத்தின் மேல் நம்மை அதிகாரியாய் உயர்த்துவார் (மத்தேயு 25:21) ஆகவே, வேலை செய்கிற இடங்களில், குடும்பங்களில் உண்மையுள்ளவர்களாய் இருங்கள். உயர்வுகள், செழிப்புகள் உங்களை தானாக தேடி வரும்! எசேக்கியா ராஜாவின் உண்மையான வாழ்க்கை, அவருக்கு உயிர்மீட்சியை கொடுத்தது. எனவே, உங்கள் வாழ்க்கையிலும் உண்மையாய் நடக்க முயற்சி செய்யுங்கள். ஆண்டவர் நிச்சயம் உங்கள்மேல் பிரியப்படுவார்! உங்களை ஆசீர்வதிப்பார்! (நீதிமொழிகள் 28:20). திடமனதாயிருங்கள்! நாம் ஜெபிப்போம்!

ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்காகவும் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். ஆண்டவரே, இவர்கள் வாழ்விலுள்ள வெறுமைகள், இல்லாமைகள் மாறட்டும். அவர்கள் ஒவ்வொருவரும் உம்மை மாத்திரம் பிரியப்படுத்தி வாழ கிருபை தாரும்! அவர்கள் உம்மேல் விசுவாசம் கொண்டு வாழவும், கீழ்ப்படிந்து நடக்கவும், உண்மையாய் இருக்கவும் அருள்புரியும். இவர்களையும், இவர்கள் குடும்பத்தையும் கொரோனாவின் இரண்டாம் அலையின் தாக்கத்திற்கு விலக்கி காத்துக்கொள்ளும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

வேத வினா போட்டி-11

மே மாத கேள்விகள்

1) பலியிடும் காளை எப்படி இருக்க வேண்டும்?
2) 'மெல்லிய மாவு' – என்ன பலி?
3) எதையும், எதையும் புசிக்கக் கூடாது?
4) நாதாபும், அபியூவும் யாருடைய குமாரர்கள்?
5) ஆரோனின் சிறிய தகப்பன் யார்?
6) 'ஒட்டகம்' புசிக்கத் தகுந்த மிருகமா?
7) 'ஆண்', 'பெண்' பிள்ளைகளை பெற்றவள், எத்தனை நாட்கள் தீட்டாய் இருப்பார்கள்?
8) தன் தாய், தகப்பனை சபிக்கிறவன் என்ன செய்யப்பட வேண்டும்?
9) 'இரத்தம்' எதற்குச் சமானம்?
10) எந்த வருடம் யூபிலி வருடம் என அழைக்கப்படுகிறது?

ஏப்ரல் மாத விடைகள்

1) 430 வருடங்கள்
2) மிரியாம்
3) இஸ்ரவேல் வம்சத்தார்
4) 12
5) சீன் வனாந்திரம்
6) யெகோவாநிசி
7) 3 நாட்கள்
8) எகிப்து
9) பரிதானம்
10) அகோலியாப்

குலுக்கல் முறையில் ஏப்ரல் மாதப் பரிசை வென்றவர்கள்
1.Sis.**தீபா, அவிநாசி.கோவை**
2.Sis.**சோபியா, தூத்துக்குடி**

விதிமுறைகள்

1.சரியான விடை எழுதுபவர்களுக்கு, பரிசு கொடுக்கப்படும். அதிகமானவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறையில் பரிசளிக்கப்படும்.
2.விடைகள் அனைத்தும் வசன ஆதாரங்களுடன் இருக்கவேண்டும்.
3.விடைகள் ஒவ்வொருமாதமும் 20–ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Sis. ஜோஸ்பின் ஸ்டீபன்.
தேவனின் அன்பு ஊழியங்கள்,
எண்14. ராமலிங்க நகர், OMR ரோடு, SRP ஸ்ல்ஸ் அருகில்,
கொட்டிவாக்கம், சென்னை – 600041
தொலைபேசி +91 44 2454 7999 || 99419 50999
Email: publications@godsloveministries.co.in
Website:www.godsloveministries.co.in

ஆண்டவரின் அற்புதங்கள்!

சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் ஆண்டவருடைய முழு நேர அழைப்பை பெற்று, "தேவனின் அன்பு ஊழியத்தை ஸ்தாபித்து" உலகெங்கிலும் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படும் ஒரு கிருபாபாத்திரம். இவரது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் இவர் நடத்தும் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை மற்றும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தும் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனைகள் உலகப் பிரசித்திபெற்றவை. விசேஷமாக, இவரது தனி ஜெபத்தில் ஆண்டவர் வெளிப்படுத்தும் மங்கள வார்த்தைகள், உள்ளம் உடைந்த அநேக மக்களை ஆறுதல்படுத்தியுள்ளது; அநேகரை சுகப்படுத்தியிருக்கிறது; ஆவிக்குரிய வாழ்வில் தொய்ந்தவர்களை, ஆண்டவரில் துளிர்விடச் செய்திருக்கிறது. இவரது ஊழியத்தின் மூலம் உலகெங்கிலும் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டோர் ஏராளம்! ஏராளம்! உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்படி, சில சாட்சிகளை கீழே தந்துள்ளோம்:

சிறுநீரக தொற்று சுகமானது!

நளினி,
பொயார் நகர், சென்னை

சிறுநீரக தொற்றினால் (Urine infection), கடந்த சில மாதங்களாக நான் மிகவும் கஷ்டப்பட்டேன். மருத்துவரை அணுகி, ஸ்கேன் எடுத்துப் பார்த்தபோது. எனது இடது பக்க கிட்னியில் ஒரு கட்டி (Cyst), இருப்பது தெரிந்தது. மருத்துவர் என்னைப் பரிசோதித்துவிட்டு, என்னுடைய இடது பக்க கிட்னியை உடனே அகற்ற வேண்டும். இல்லாத பட்சத்தில், கிட்னி முழுவதும் தொற்று பரவிவிடும் என்றார். அப்போது என்னுடைய அண்ணி என்னை தொலைபேசியில் அழைத்து, இது விஷயமாக உங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வரும். அதுவரை நீங்கள் பொறுமையோடு இருங்கள் என்றார்கள். அதுபோல மாலை 5 மணிக்கு, சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டார்கள். அவர்கள் "மகளே உனக்கு தெய்வீக சுகம் கிடைக்கப்போகிறது. நீ இன்னும் ஒரு மருத்துவரை அணுகி, இரண்டாவது மருத்துவ ஆலோசனை (2nd Opinion) கேள்" என்று சொன்னார். அதுபோல நானும் வேறு ஒரு மருத்துவரை அணுகியபோது, என்னுடைய கிட்னிகள் இரண்டும் எப்படி வேலை செய்கிறது? என்ற பரிசோதனை (Test) எடுக்கும்படி கூறினார். நான் பரிசோதனை செய்தபோது, என்னுடைய கிட்னிகள் இரண்டும் நன்றாக வேலை செய்தது. ஆகவே, மருத்துவர் என் கிட்னியிலுள்ள கட்டியை மட்டும் அகற்ற வேண்டும் என்றார். சகோதரர் அவர்கள் எனக்காக ஜெபித்துவிட்டபடியால், எனக்கு நிச்சயம் அற்புத சுகம் கிடைக்கும் என்று ஆண்டவரை விசுவாசித்தேன். அவருடைய கிருபையால் என் கிட்னியிலுள்ள கட்டி முற்றிலும் அகற்றப்பட்டு, கிட்னி காப்பாற்றப்பட்டது. ஆண்டவர் எனக்குப் பரிபூரண சகத்தைக் கொடுத்தார்! அல்லேலூயா.

மகனின் திருமணத்தை நடத்திக் கொடுத்தார்!

லூயிசா,
மைலாப்பூர், சென்னை

ஆண்டவர் என்னுடைய வாழ்வில் சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் ஊழியத்தின் மூலம் அநேக அற்புதங்களைச் செய்துள்ளார். சகோதரர் அவர்கள் சத்தியம் தொலைக்காட்சியில் தேவ செய்தியளிக்கும்போது, "உங்களுடைய குடும்பத்தில் ஆண்டவர் ஒரு அற்புதம் செய்வார். நீங்கள் நம்பிக்கையோடே இருங்கள்" என்று சொன்னார். ஜெப நேரத்தில் சகோதரர் ஸ்டீபன் அவர்களோடு சேர்ந்து நானும் என் மகனுக்கு விரைவில் திருமணம் நடக்க வேண்டும் என ஜெபித்தேன். என்ன ஆச்சரியம்! இரண்டே நாட்களில் ஆண்டவர் அற்புதம் செய்தார். என் மகனுக்கு அருமையானதொரு பெண் கிடைத்து, உடனே நிச்சயதார்த்தம் முடிந்தது, மேலும் அதே மாதம் நடந்த "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூட்டத்தில் சகோதரரிடம் என் மகனின் திருமண அழைப்பிதழைக் கொடுத்து ஜெபித்தேன். அப்பொழுது சகோதரர் சொன்னார். "எந்தவொரு குறையும் இல்லாமல் திருமணம் வெகு சிறப்பாய் நடக்கும்" என்றார். அதுபோலவே கடனே இல்லாமல் இந்தத் திருமணத்தை ஆண்டவர் அற்புதமாய் நடத்திக்கொடுத்தார். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, என் மகனின் திருமணத்தை நடத்திக் கொடுத்த ஆண்டவருக்கும், ஜெபித்த சகோதரருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அல்லேலூயா.

நோயின் அறிகுறிகள் நீங்கியது!

பென்னி ஜோசப்,
பெங்களூர்

கடந்த சில மாதங்களாக என்னுடைய சரீரம் மிகுந்த பெலவீனமாய் இருந்தது. ஆகவே, என்னுடைய ரத்தத்தை பரிசோதனை செய்தபோது, என்னுடைய 2 கிட்னிகளும் 70% செயலிழந்தும், 30% மட்டுமே வேலை செய்வதாகவும் மருத்துவர் தெரிவித்தார். பெங்களூரில் அநேக மருத்துவமனைகளில் நான் பரிசோதித்தபோது, "வேறு கிட்னி கண்டிப்பாக பொருத்தியே தீரவேண்டும்" என்றே மருத்துவர்கள் பரிந்துரை செய்தார்கள். என்னுடைய தாயார், சகோதரர் ஸ்டீபன் அவர்களுடைய ஊழியங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். ஒரு நாள் அவர்கள் என்னை கட்டாயப்படுத்தி, "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். தனி ஜெபத்தில் சகோதரர் அவர்கள் என் மீது கை வைத்து, "உன்னுடைய கிட்னி கிரியாட்டினின் லெவல் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆண்டவர் உனக்குப் புதிய கிட்னிகளை தருவார்" என்றார். என்ன ஆச்சரியம்! நான் பெங்களூர் சென்று 3 மாதங்களுக்குள், மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்தபோது, என்னுடைய கிட்னிகள் இரண்டும் நன்றாக வேலை செய்கிறது என நார்மல் ரிப்போர்ட் வந்தது. சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்த ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக!

துணை மேலாளர் வேலையை அருளினார்!

அந்தோனி,
அந்தமான்

நான் வேலை செய்து வந்த அந்தமான் எச்.டி.எப்.சி. வங்கிக் கிளை மூடும் நிலையில் இருந்தது. நிர்வாகத்தார் என்னை அழைத்து நீங்கள் வேறு வேலையை பார்த்துக்கொள்ளுங்கள் என்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூட்டத்தில் கலந்துகொண்டு, சகோதரரிடம் ஜெபித்தபோது, "ஆண்டவர் நிச்சயம் உங்கள் வாழ்வில் அற்புதங்களை நடப்பிப்பார். விரும்பிக் கேட்கிற ஆசீர்வாதங்களை தருவார்" என்றார். என்னுடைய வேலை விஷயமாக, கிளை மேலாளரை நான் தொடர்புகொண்டபோது, "நீங்கள் நேரடியாக வங்கிக் குழும தேர்வை எழுதுங்கள்" என்றார். சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் எனக்காக ஜெபித்துள்ளபடியால், ஆண்டவர் நிச்சயம் எனக்கு உதவிசெய்வார் என்று எண்ணி, நானும் முயற்சி செய்து, வங்கிக் குழும தேர்வை எழுதினேன். என்ன ஆச்சரியம்! கர்த்தருடைய பெரிய கிருபையினால் வங்கிக் குழும தேர்வில் வெற்றிபெற்று, துணை மேலாளராக வேலையில் சேர உதவிசெய்தார். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, வங்கிக் குழும தேர்வில் வெற்றியை அருளி, துணை மேலாளர் வேலையை கொடுத்த ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக! அல்லேலூயா.

எனக்கும் என் சகோதரிக்கும் நல்ல வேலைகளை கொடுத்தார்!

செலினா & ஷீபா,
சென்னை

நானும், என் சகோதரியும் சிவில் இஞ்சினியரிங் கடைசி ஆண்டு படித்துக்கொண்டிருக்கிறோம். கடந்த மாதம் நடைபெற்ற "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாச கூடுகையில் நாங்கள் இருவரும் கலந்துகொண்டோம். ஜெப வேளையில் சகோதரர் ஸ்டீபன் அவர்களிடம் எனக்கும் என் சகோதரிக்கும் வேலை கிடைக்கும்படி ஜெபித்துக்கொண்டோம். என்ன ஆச்சரியம்! ஆண்டவர் அன்பு சகோதரர் ஜெபித்த ஜெபங்களைக் கேட்டு, நேற்று எனக்கும், என் சகோதரிக்கும் ஒரே கம்பெனியில் வேலை கிடைக்க கிருபை செய்தார். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, அற்புதம் செய்த ஆண்டவருக்கே நன்றிசெலுத்துகிறேன். அல்லேலூயா.

மார்வெல் திருமண தகவல் மையம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

திருமணம் என்பது பரலோகத்தில் நிச்சயிக்கப்பட்டது. ஆதாம் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட ஆண்டவர், அவனுக்கு ஏற்ற துணையாக ஏவாளை உண்டுபண்ணினார் (ஆதியாகமம் 2:18,21,22). இன்றைக்கும் மணமகனுக்கு ஏற்ற மணவாட்டியை தெரிந்தெடுப்பது ஆண்டவருக்கு முன்பாகவும், அவரது வசனத்திற்கு முன்பாகவும் நேர்த்தியானதாக, அருமையானதாக இருக்கும்!

உங்கள் வசதிக்காக, நாங்கள் மிகுந்த ஜெபத்துடன் மார்வெல் திருமண தகவல் மையத்தை ஆரம்பித்து, பல வருடங்களாக நடத்தி வருகிறோம். எனவே, இத்திருமண மையத்தில் உங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடைய பெயர்களை பதிவுசெய்து, அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகளை தெரிந்தெடுக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஜெபத்தோடு இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுங்கள். கர்த்தருக்குச் சித்தமானது அவரது கரத்தினாலே உங்களுக்கு வாய்க்கும் (ஏசாயா 53:10). மகிமையான நல்விசேஷங்கள் உங்கள் குடும்பத்திலே வசனிக்கப்படும் / பேசப்படும் (சங்கீதம் 87:3).

மேலும் விபரங்களுக்கு 7824855999 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளலாம் அல்லது எங்களது சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை ஆகிய இடங்களிலுள்ள ஜெப கோபுரங்களுக்கு நேரடியாக சென்றும் பதிவுசெய்துகொள்ளலாம். முகவரிகளை கீழே தந்துள்ளோம்:

சென்னை	**தேவனின் அன்பு ஊழியங்கள்,** எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP ரூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை – 600 041. மின்னஞ்சல்: info@marvelmatrimony.com அலைபேசி: 78248 55999
மும்பை	**தேவனின் அன்பு ஊழியங்கள்,** மும்பை ஜெப கோபுரம், எண்.L-411, ட்ரீம்ஸ்-தி-மால், எல்.பி.எஸ். மார்க், சாகர் விஹார் அருகில், பாண்டூப் மேற்கு, மும்பை – 400 078. அலைபேசி: 9930737999
நாகர்கோவில்	**தேவனின் அன்பு ஊழியங்கள்,** நாகர்கோவில் ஜெப கோபுரம், பாக்கியம் திருமண மண்டப வளாகம், எண். 177, WCC ரோடு, YMCA எதிர்புறம், நாகர்கோவில் – 629 001 கன்னியாகுமரி மாவட்டம். அலைபேசி: 9884480999

அதுமட்டுமல்ல திருமணம், வரவேற்பு போன்ற சுபநிகழ்வுகளில் புகைப்படம் எடுத்தல் (Wedding and Reception photography), வீடியோ எடுத்தல் (Video Coverage) போன்ற பிற சேவைகளையும் நாங்கள் வழங்குகிறோம். விபரங்களுக்கு, www.marvelmatrimony.com என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும் அல்லது 78248 55999 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

சிறுவர்கள் பகுதி

(குட்டீஸ் ஸ்பெஷல்):

உண்மைக்குக் கிடைத்த பரிசு!

(சகோதரி **ஸ்டெஃபி ஸ்டீபன்,**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

ஹாய் குட்டீஸ்,

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் எல்லோரையும் நான் வாழ்த்துகிறேன்.

என்ன குட்டீஸ் நல்லா இருக்கின்றீர்களா? மே மாதம் என்றாலே எல்லோருக்கும் சந்தோஷமான ஒரு மாதம். இந்த மாதம் முழுவதும் விடுமுறை நாட்களானபடியால், வீட்டிலே நேரத்தை செலவழிப்போம். இந்த நாட்களிலே ஆண்டவருக்குப் பயந்து, பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, உண்மையுள்ள பிள்ளைகளாய் நேர்மையான பிள்ளைகளாய் நாம் வாழ வேண்டும். உண்மையுள்ள பிள்ளைகள் அநேக ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார் (நீதிமொழிகள் 28:20). இந்த மே மாதத்தில் உண்மை, நேர்மைக்குக் கிடைக்கிற பரிசு குறித்து ஒரு அருமையான கதையை சொல்லி, உங்களுக்காக ஜெபிக்கப் போகிறேன்.

ஒரு ஊரில் ஒரு அழகான பெண் இருந்தாள், அவள் பெயர் சுமா. பெற்றோருக்கு அவள் ஒரே மகளாக, செல்லமாக வளர்ந்தாள். பெற்றோர் எது கேட்டாலும் அவளுக்கு வாங்கிக் கொடுத்தனர். ஒரு நாள் சுமா பள்ளிக்குச் செல்லும்போது அவளுடைய தோழி ஜோதியை சுற்றி எல்லோரும் நின்றுகொண்டிருந்தனர். ஏனென்றால், அவள் ஒரு அழகான, விலை உயர்ந்த பேனா ஒன்றை வைத்திருந்தாள்! அதை எல்லாரும் சுற்றி நின்று. ஆச்சரியமாக பார்த்துக்கொண்டிருந்தனர். அதைப் பார்த்ததும் சுமாவிற்கு பொறாமையாகவும், ஆசையாகவும் இருந்தது. அடுத்த நாள் காலையில் எல்லோரும் பள்ளிக்கு வந்தனர், பள்ளியில், காலை அசெம்பிளி நடந்தது. ஆனால் அந்த வகுப்பைச் சார்ந்த சுருதியோ அசெம்பிளிக்கு வரவில்லை. ஏனென்றால் அவளுக்குத் தலைவலி. அதனால் வகுப்பறையில் படுத்திருந்தாள்.

திடீரென அங்கு வந்த சுமா, மெதுவாக ஜோதியின் பேனாவை எடுத்துவிட்டாள். அசெம்பிளி முடிந்து வந்ததும், ஜோதியின் பேனாவை காணவில்லை என்று ஆசிரியரிடம் தெரிவிக்கப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் சுருதிதான் எடுத்திருப்பாள். அவள் தான் வகுப்பறைக்குள் படுத்திருந்தாள் என்று கூறினர். சுருதி அதைக் கேட்டு அழுதுவிட்டாள். ஆசிரியர் மாணவிகளைப் பார்த்து, உங்களுக்கு ஒரு நாள் டைம் கொடுக்கிறேன். எடுத்தவர்கள் நாளைக்குள் கொண்டு வந்து வகுப்பறைக்குள் வைத்துவிட வேண்டும் என்று கூறினார். இதைக் கேட்ட சுமாவுக்கு மனது வலித்தது. இத்தனை நாட்களும் நாம் கடவுளுக்கும், பெற்றோரும் உண்மையாய் நடந்தோமே, ஆனால் இப்பொழுது பேராசையில் என் தோழியின் பென்னை எடுத்துவிட்டேனே. எனக்காக, என் தோழி பழிச்சொல்லுக்கு ஆளாகிவிட்டாளே என்று நினைத்து அடுத்த நாள் பள்ளிக்கு வந்ததும், ஆசிரியரிடம் நேரடியாகச் சென்று, நான் தான் அந்தப் பென்னை எடுத்தேன். சுருதி மேல் எந்தத் தவறும் இல்லை என்று தான் செய்த தவறை ஒப்புக்கொண்டாள். இதைக் கேட்ட வகுப்பாசிரியர், "உன்னுடைய உண்மை, நேர்மை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று அவளுக்கு வெகுமதிகளை கொடுத்து பாராட்டினார்.

எனவே குட்டீஸ் நாம் சிறு பிள்ளைகளாக இருந்தாலும் சரி, பெரியவர்களானாலும் சரி, மற்றவர்களின் பொருட்களுக்கு ஒருபோதும் ஆசைப்படவே கூடாது. உண்மையை பேச வேண்டும். நேர்மையாக நடக்க வேண்டும். யாருடைய பொருளையும் திருடக் கூடாது. ஆண்டவருக்குப் பிரியமான பிள்ளைகளாக நடக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் உங்களை உயர்த்துவார்! குட்டீஸ், நாம் இணைந்து கீழ்க்கண்ட வேத வசனங்களை வாசித்து, ஜெபத்திற்குள் கடந்து செல்லுவோம்:

"...பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" (யாத்திராகமம் 20:17).

"என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்" (சங்கீதம் 119:36)

ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையைப் படிக்கும் சிறு பிள்ளைகள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். அவர்கள் ஒவ்வொருவரும் உண்மையாக நடக்கவும், பிறருடைய பொருட்களுக்கு ஆசைப்படாமல், பிறர் பொருட்களை திருடாமல் உமக்குப் பிரியமான பிள்ளைகளாக நடக்க கிருபை தாரும். இந்தப் பொது முடக்க காலங்களிலே எந்தவொரு தீங்கும் அவர்களை அணுகாமல் பாதுகாத்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.



கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவீர்கள்!

(சகோதரி **பவ்யா டெரில்,**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

அன்பான வாலிப தம்பி, தங்கைகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள்!

உங்களை மீண்டும் இந்த மாத இதழ் மூலமாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்நாட்களில் வாலிபப் பிள்ளைகள், கர்த்தருக்குக் காத்திருப்பது என்பது கூடாத காரியமாய் இருக்கிறது. ஒரு நாளில் அவர்கள் எல்லா காரியங்களையும் செய்வதற்கு நேரம் இருக்கும்! ஆனால், கர்த்தருக்குக் காத்திருந்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஒரு நேரத்தை ஒதுக்குவதில்லை. வேதம் சொல்லுகிறது:

"இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்..." (ஏசாயா 40:30,31).

இந்த நாட்களில் எல்லாமே கம்பியூட்டர் யுகமாக இருக்கிறது. தகவல் தொழில் நுட்பத்துறைதான் (IT Sector), மனிதனை முழுவதும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. கம்பியூட்டரில் உட்கார்ந்து ஒரு கிளிக் செய்தாலே, நமக்குத் தேவையானவைகளை, நாம் இருக்கும் இடத்திலேயே பெற்றுக்கொள்கிறோம். உதாரணமாக ஒரு டாக்குமென்ட் வேண்டுமானாலும் சரி அல்லது பதிவுசெய்ய வேண்டுமானாலும் சரி எல்லாவற்றையும் வேகமாக, ஆன்லைன் மூலமாக, இன்டர்நெட் (வலைத்தளம்) பயன்படுத்தி, வீட்டில் இருக்கும் இடத்திலேயே முடித்துக்கொள்ளுகிறோம். முன் காலங்களில், ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால், அதுசம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு நேரில் சென்று, வரிசையில் பொறுமையோடு காத்திருந்து, செய்து முடித்தோம். ஆனால் இப்பொழுதோ எல்லாவற்றையும் எளிதாக, கம்பியூட்டர் மூலம் முடித்துவிடுகிறோம். இதனால் நமக்கு வெளி உலக தொடர்பே இல்லாமல் ஆகிவிடுகிறது.

இந்த பொது முடக்க காலத்தில், அநேகர் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்லமுடியாமல், எப்பொழுதும், வீட்டில் இருந்துகொண்டே ஆன்லைன் வகுப்புகளில் கலந்துகொள்ளும் நிலை உள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையை பொருத்தமட்டில் எல்லாருமே வீட்டிலேயே இருந்து வேலை செய்துகொண்டு, கம்பியூட்டரோடு நமது வாழ்க்கை ஒடிக்கொண்டிருக்கிறது. இதனால் அநேகம்பேர் என்னடா இது உலகம் என்று சோர்வடைந்துவிடுகிறோம்.

வேதத்திலே நாம் வாசிக்கிறோம், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். கண்டிப்பாக இந்த பொது முடக்க நிலை மாறி,செட்டைகளை அடித்து நாம் எழும்பப் போகிறோம். இதற்கு எடுத்துக்காட்டாக, ரோமர் 4:19 முதல் 21 வரையுள்ள வேத வசனங்களை நீங்கள் வாசிப்பீர்களேயானால், ஆபிரகாம் நூறு வயதுள்ளவனாயிருந்தும், தன் சரீரம் செத்துப்போனதையும்,

சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தை கடுகளவும் சந்தேகப்படாமல், ஆண்டவர் அதை நிறைவேற்ற வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நம்பினான். விசுவாசத்தில் வல்லவனானான். ஆகவே தான், ஆண்டவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஈசாக்கை கொடுத்தார்! அந்த தேவன் ஒருபோதும் உங்களை கைவிடமாட்டார் (சங்கீதம் 34:10) அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவர்! (ரோமர் 4:17) தற்போதைய சூழ்நிலைகள் நம்முடைய வாழ்வில் சோர்வை கொடுத்தாலும், எல்லாமே நம்முடைய வாழ்வில் இருண்ட வாழ்க்கையாய் இருந்தாலும், எல்லாவற்றையும் ஆண்டவர் மாற்றிப்போட வல்லவராக இருக்கிறார் என்பதை நாம் நம்புவோம். அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிப்போம். அப்பொழுது அவர் நம்முடைய வாழ்வில் அற்புதங்களை செய்வார்! வேதம் சொல்லுகிறது:

"கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி..." (சங்கீதம் 40:1-3)

இப்பொழுதுள்ள நிலை, பயங்கரமான ஒரு குழியில் இருப்பதுபோல இருந்தாலும், விசுவாசத்தோடு ஆண்டவர் என் வாழ்வில் எல்லாவற்றையும் நன்மைக்காகத்தான் செய்வார் என நம்பிக்கையோடே வேதத்தைக் கருத்தாய் வாசித்து, ஜெபித்து, அவருடைய வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டோமானால், கண்டிப்பாக நம்மை உயர்ந்த ஸ்தலத்தில், ஏறியிருக்கும்படிச் செய்து, நம்முடைய அடிகளை அவர் உறுதிப்படுத்துவார்!

எனக்கன்பான வாலிப தம்பி தங்கைகளே, இந்த மாதத்தில் நான் உங்கள் எல்லாரையும் உற்சாகப்படுத்துகிறேன். ஒவ்வொரு நாளும் அநேக எதிர்மறையான செய்திகளை நாம் கேட்கிறோம். எந்தவொரு செய்தியையும் எதிர்மறையாக நாம் எடுக்காமல், கருத்தாய் ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து, ஜெபத்திலே எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கும்போது, புதுபெலனடைந்து, கழுகுகளைப் போல, செட்டைகளை அடித்து, உயரே பறக்கச் செய்வார்! அல்லேலூயா! நாம் ஜெபிப்போம்:

ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற வாலிப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்காகவும் நான் கண்ணீரோடு ஜெபிக்கிறேன். ஆண்டவரே, அவர்கள் ஒவ்வொருவரும் உம்மில் விசுவாசம் கொண்டு வாழவும், உமக்குக் காத்திருந்து, புதுபெலனடைந்து செட்டைகளை அடித்து எழும்பவும் கிருபை தாரும்! இந்த பொது முடக்க காலத்தில் அவர்களை எந்தவொரு தீங்கும் அணுகாதவண்ணம் பாதுகாத்துக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்

தினந்தோறும்

கீழ்காணும் டிவி சேனல்களின் மூலமாக நமது தேவனின் அன்பு ஊழியத்தின் மங்கள வார்த்தைகளை கேட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

நம்பிக்கை டிவியில் தினமும் இரவு 11.00 முதல் 11.30 வரை
Satellite Channel - SCV 757, Airtel 817, Tata Sky 1592, Videocon 578, TCCL 743, Sun Direct 611, Polimer TV 726, Aadhar 879, Akshaya cable 606, Arasu Cable 600, Jio 4G Mobile Service Provider

அதிசயம் டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை
Tamilnadu - TCCL 737 | Kanyakumari - JAK 136 | Nagai & Theni - SCV 332 | Singapore Malasiya & Worldwide - BeeipTv 227 | USA, Canada & England - Starone IPTv 1426 Android smart TV

ஹெவன் டிவியில் தினமும் காலை 8.00 முதல் 8.30 வரை
Tamilnadu - TCCL 729, Polimer VK Digital 715 | Kanyakumari - SCV 214, AMN Digital Network 812

ஷம்மா டிவியில் தினமும் காலை 10.00 முதல் 10.30 வரை மற்றும் இரவு 9.00 முதல் 9.30 வரை Kanniyakumari Dist - SCV 223, VK Digital 223, TCCL 182

ஜீசஸ் டிவியில் தினமும் காலை 8.30 முதல் 9.00 வரை
Kanniyakumari - TCCL 181 | Airtel XStream Set top box

கிராஸ் டிவியில் தினமும் காலை 9.30 முதல் 10.00 வரை
Tamilnadu - TCCL 734

சத்தியம் டிவியில் தினமும் இரவு 11.30 முதல் 12.00 வரை
Satellite TV

வாணி டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை மற்றும் இரவு 8.00 முதல் 8.30 வரை
Tirunelveli & Tenkaasi - JAK Digital 120

ஆல்மைட்டி டிவியில் தினமும் இரவு 7.00 முதல் 7.30 வரை Chennai - Crystal 160

வாரந்தோறும்

ஞாயிறுதோறும்

Angel Sky
12.00 AM
12.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

திங்கள்தோறும்

Angel Sky
5.00 AM
5.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

நம்பிக்கை Television
7.30 AM
8.00 AM
Satellite Channel

செவ்வாய்தோறும்

Angel Sky
5.00 AM | 9.00 PM
5.30 AM | 9.30 PM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801,
VK Digital 117, Digcon 85,

புதன்தோறும்

Angel Sky
8.00 AM
8.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

வியாழன்தோறும்

தொவன் HEAVEN TV INDIA
8.30 PM
9.00 PM
TamilNadu

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

Subhavaartha Television
7.30 AM
8.00 AM
Satellite Channel

வெள்ளிதோறும்

Angel Sky
8.00 AM
8.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

சனிதோறும்

King & Glory
7.30 PM
8.00 PM
Pondicherry

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

ANGEL TV DETAILS (Satellite Channel)

SUN DIRECT 610 | TATA Sky 1591 | SCV 260 | AIRTEL DTH 815

எங்கள் சேவைகள்

24X7 மணி நேர ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்க, நீங்கள் எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் எங்களை அழைக்கலாம். எங்கள் ஜெப வீரர்கள் 24 மணி நேரமும் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

044 2454 7999
99419 50999

மின்னஞ்சல் ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளை சகோ.T.ஸ்டீபன் அவர்களுக்கு அனுப்பி, ஆண்டவரிடமிருந்து பதில்களைப் பெற:

prayer@godsloveministries.co.in

சமூக வலைத்தளம்:

Evg.T.Stephen

9841040999

Owned, Edited and Published by **Sis.Josephin Stephen**

தேவனின் அன்பு ஊழியங்கள்

எண்.14, ராமலிங்க நகர் OMR ரோடு,
SRP டூல்ஸ் அருகில் கொட்டிவாக்கம், சென்னை - 600 041
தொலைபேசி: +91 44 2454 7999 / 99419 50999
prayer@godsloveministries.co.in www.godsloveministries.co.in